இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

தமது ஏப்ரல் மாதத்திற்கான செபக் கருத்தை வெளியிட்டுள்ள திருத்தந்தை லியோ, தங்களது இறைஅழைத்தல் வாழ்வில் (vocation) தனிப்பட்ட சோதனைகளையும் சவால்களையும் சந்திக்கும் குருக்களுக்காகச் செபிக்குமாறு கத்தோலிக்க இறைமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## உலகத் தலைவர்களுக்கு திருத்தந்தை லியோ XIV வேண்டுகோள்: "போரை நிறுத்த தீர்வு காணுங்கள்"

பாஸ்கா பெருவிழாவிற்கு (ஈஸ்டர்), முன்னர் வத்திக்கான் செய்தியாளர்களிடம் பேசிய திருத்தந்தை லியோ XIV, மோதல்களாலும் வன்முறையாலும் காயப்பட்டுக் கிடக்கும் உலகில் அமைதி நிலவ மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுத்துள்ளார்.

மார்ச் 31-ஆம் தேதி மாலை காஸ்தெல் காந்தோல்ஃபோவில் (Castel Gandolfo) செய்தியாளர்களிடம் பேசிய திருத்தந்தை, உலகத் தலைவர்கள் அனைவரும் தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்க மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு வலியுறுத்தினார். குறிப்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப் பற்றி அவர் குறிப்பிடுகையில்:

"அதிபர் டிரம்ப் அண்மையில் போரை நிறுத்த விரும்புவதாகக் கூறியிருப்பதை அறிந்தேன். அவர் வன்முறையைக் குறைப்பதற்கான ஒரு வழியைத் தேடுவார் என்று நம்புகிறேன். குண்டுவெடிப்புகளையும் வன்முறையையும் குறைப்பது, மத்திய கிழக்கிலும் உலகின் பிற பகுதிகளிலும் அதிகரித்து வரும் வெறுப்புணர்வை நீக்க பெரிதும் உதவும்."

பாஸ்கா காலம் என்பது ஆண்டின் மிகவும் புனிதமான காலம் என்பதை நினைவூட்டிய திருத்தந்தை, "இது அமைதிக்கான நேரம், ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நேரம். ஆனால் நாம் பார்ப்பதோ, உலகின் பல இடங்களில் அப்பாவிக் குழந்தைகள் உட்படப் பலரும் மடிந்து கொண்டிருக்கிறார்கள்" என்று வேதனையுடன் தெரிவித்தார்.

மேலும், "கிறிஸ்தவர்கள் இந்த நாட்களில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை இன்றும் வன்முறையாலும் போரினாலும் பாதிக்கப்படும் அப்பாவி மக்களிடம் காண வேண்டும். அவர்களுக்காக நாம் மன்றாடுவோம். பாஸ்கா பண்டிகைக்கு முன்பே ஒரு போர்நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்று அவர் கூறினார்.

வரும் ஜூன் மாதம் ஸ்பெயின் நாட்டிற்கு மேற்கொள்ளவிருக்கும் திருத்தூதுப் பயணம் குறித்துப் பேசுகையில்: "கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக நான் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று வருகிறேன். அங்குள்ள மக்களின் ஆழ்ந்த விசுவாசத்தையும், அன்பையும் நான் அறிவேன். இந்தப் பயணத்திலும் அந்த அன்பையும் விசுவாசத்தையும் நாம் அனைவரும் இணைந்து கொண்டாடுவோம் என்று நம்புகிறேன்" என்றார்.

தமிழாக்கம் ஹெரால்டு

## ‘சோதனையில் இருக்கும் குருக்களுக்காக’ திருத்தந்தையின் ஏப்ரல் மாத செபக் கருத்து



தமது ஏப்ரல் மாதத்திற்கான செபக் கருத்தை வெளியிட்டுள்ள திருத்தந்தை லியோ, தங்களது இறைஅழைத்தல் வாழ்வில் (vocation) தனிப்பட்ட சோதனைகளையும் சவால்களையும் சந்திக்கும் குருக்களுக்காகச் செபிக்குமாறு கத்தோலிக்க இறைமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருத்தந்தையின் உலகளாவிய செப வலைப்பின்னல் (Pope’s Worldwide Prayer Network) தயாரித்துள்ள 'திருத்தந்தையோடு இணைந்து செபியுங்கள்' என்ற காணொளியில் அவர் கூறியிருப்பதாவது:

- **தனிமையும் சோர்வும்:** ”தனிமைச் சுமை அழுத்தும்போது, சந்தேகம் இதயத்தை மறைக்கும்போது, நம்பிக்கை அற்றுப்போகும் அளவுக்குச் சோர்வு மேலோங்கும்போது, சோதனைகளைச் சந்திக்கும் குருக்களைத் தந்தையாம் இறைவனின் கரங்களில் ஒப்படைக்கிறேன்.”
- **பணி மேலாளர்கள் அல்ல:** குருக்கள் தங்களை வெறும் ”பணி செய்பவர்களாகவோ” அல்லது ”தனிமையான வீரர்களாகவோ” பார்க்காமல், இறைவனின் நிபந்தனையற்ற அன்பைப் பெற்றுக்கொண்ட ”தாழ்மையான சீடர்களாக” மாற வேண்டும். அவர்களின் காயங்களையும் போராட்டங்களையும் இறைவன் நன்கு அறிவார்.

நமது குருக்களைப் பராமரிக்க ஒரு சமூகமாக நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை வலியுறுத்தினார்:

1. **தீர்ப்பு வழங்காமல் செவிமடுத்தல்:** அவர்களைக் குறை கூறாமல் அவர்களின் குறைகளைக் கேட்க வேண்டும்.
2. **பரிபூரணத்தை எதிர்பார்க்காமல் நன்றி கூறுதல்:** அவர்கள் குறையே இல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல், அவர்கள் செய்யும் பணிகளுக்கு நன்றி கூற வேண்டும்.
3. **உடன் பயணித்தல்:** நற்செய்தி அறிவிக்கும் பணியில் அவர்களோடு இணைந்து செயல்பட்டு, செபத்தாலும் அன்பாலும் அவர்களைத் தாங்க வேண்டும்.

”நமக்குத் துணையாக இருக்கும் குருக்களுக்கு, நாம் துணையாக இருப்போம்” என்று திருத்தந்தை அழைப்பு விடுத்தார். தூய ஆவியானவர் குருக்களின் இதயங்களில் ”நற்செய்தியின் மகிழ்ச்சியை” மீண்டும் தூண்ட வேண்டும் என்று திருத்தந்தை வேண்டினார்.

- ”அவர்களுக்கு நல்ல நண்பர்களையும், சகோதரத்துவ ஆதரவையும், இக்கட்டான நேரங்களில் நகைச்சுவை உணர்வையும் வழங்க இறைவனை வேண்டுகிறேன்.”
- ”இறைவன் மீதுள்ள நம்பிக்கையையும், திருச்சபைக்குத் தாழ்மையுடன் பணியாற்றும் மகிழ்ச்சியையும் அவர்கள் எப்போதும் இழந்துவிடக் கூடாது” என்று அவர் நிறைவு செய்தார்.

திருத்தந்தையின் செப வலைப்பின்னலின் இயக்குநர் தந்தை கிறிஸ்டோபர் ஃபோன்ஸ் கூறுகையில், ”குருக்களுக்கு மனித ரீதியான ஆதரவும், உண்மையான நட்பும், செப உதவியும் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தாங்கள் தனிமையில் இல்லை என்பதை குருக்கள் உணர வேண்டும்,” என்று குறிப்பிட்டார்.

குருக்களும் நம்மைப் போன்ற பலவீனமான மனிதர்களே; அவர்களுக்கும் இறைவனின் இரக்கமும், மக்களின் புரிதலும் தேவைப்படுகிறது. ஏப்ரல் மாதத்தில் நமது மந்தையின் (மக்களின்) செபங்கள் வழியாக நமது குருக்களுக்கு ஆன்மீக பலத்தை வழங்குவோம்.

தமிழாக்கம் ஹெரால்டு

## நமது குருக்களுக்கா திருத்தந்தையோடு இணைந்து செபிப்போம்



ஆண்டவராகிய இயேசுவே, நல்ல ஆயரே, எங்கள் பயணத்தின் துணையே, இன்று அனைத்துக் குருக்களையும் உம் கைகளில் ஒப்படைக்கிறோம். குறிப்பாக, அழைப்பு வாழ்வில் சோதனைகளைச் சந்திப்பவர்களையும், தனிமைச் சுமை அழுத்தும்போது, இதயத்தைச் சந்தேகம் மேகம்போலச் சூழ்ந்துக்கொள்ளும் போது, நம்பிக்கையை விடச் சோர்வு மேலோங்கி நிற்கும் நிலையில் இருப்பவர்களையும் உம்மிடம் ஒப்படைக்கிறோம்.

அவர்களின் போராட்டங்களையும் காயங்களையும் நீர் அறிவீர்; உம்முடைய நிபந்தனையற்ற அன்பின் உறுதியை அவர்களில் புதுப்பித்தருளும். அவர்கள் தங்களை வெறும் பணி செய்வோராகவோ அல்லது தனிமையான வீரர்களாகவோ உணராமல், உம்மால் அன்புச் செய்யப்படுகிற மகன்களாகவும், தாழ்மையான, பிரியமான சீடர்களாகவும், தங்கள் மக்களின் செபத்தால் தாங்கப்படுகிற ஆயர்களாகவும் உணரச் செய்தருளும்.

நல்ல பிதாவே, எங்கள் குருக்களைப் பராமரிக்க ஒரு சமூகமாக எங்களுக்குக் கற்றுக்கொடுத்தருளும்: அவர்கள் சொல்வதைத் தீர்ப்பு வழங்காமல் செவிமடுக்கவும், அவர்களிடம் முழுமையை (Perfection) எதிர்பார்க்காமல் நன்றி கூறவும், சொல்லாலும் செயலாலும் உம் இறையரசை அறிவிக்கின்ற திருமுழுக்கு வழியாகப் பெற்ற பணியில் அவர்களோடு இணைந்து செயல்படவும், நெருக்கமான உறவோடும், உண்மையான செபத்தோடும் அவர்களுடன் பயணிக்கவும் எங்களுக்குத் துணைபுரியும். எங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருக்கும் அவர்களை நாங்களும் ஆதரிக்கச் செய்தருளும்.

தூய ஆவியானவரே, எங்கள் குருக்களுடன் நற்செய்தியின் மகிழ்ச்சியை மீண்டும் தூண்டியருளும். அவர்களுக்கு நல்நட்புகளையும், சகோதரத்துவ ஆதரவுகளையும், எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்காதபோது நகைச்சுவை உணர்வையும், தங்கள் அழைப்பு வாழ்வின் அழகை எப்போதும் மீண்டும் கண்டுகொள்ளும் அருளையும் தந்தருளும்.

அவர்கள் உம்மீது வைத்துள்ள நம்பிக்கையை ஒருபோதும் இழக்காமலும், தாழ்மையான, தாராளமான உள்ளத்தோடு உம் திருச்சபைக்குப் பணியாற்றும் மகிழ்ச்சியை மறக்காமலும் இருக்கச் செய்தருளும்.

ஆமென்

## புனித அன்னாள் சிறுபேராலயம் மகளிர் தினக் கொண்டாட்டம்

புக்கிட் மெர்தஜாம் – மறைமாவட்டத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக, புனித அன்னாளின் சிறுபேராலயம் (MBSA) தனது முதல் சர்வதேச மகளிர் தின (IWD) விழாவை சிறப்பாகக் கொண்டாடியது. உலகளவில் மகளிர் உரிமைகளுக்காக 115 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்த தினம், 2026 ஆம் ஆண்டில் “பெறுவதற்காக கொடு: மாற்றத்தை வழிநடத்துவோம்” என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது.

இயேசு உயிர்த்தெழுதல் திருநாள், பொங்கல், தந்தையர் தினம், அன்னையர் தினம் போன்ற விழாக்களை வழக்கமாகக் கொண்டாடும் இப்பங்கில், தமிழ் மகளிர் அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சி ஒரு புதிய முயற்சியாக அமைந்தது. குடும்பத்திலும் சமூகத்திலும் புறக்கணிக்கப்படுவதாக உணரும் ஒற்றைத் தாய்மார்கள், தனித்தாய் பெற்றோர், மற்றும் தனிமையில் வாழும் பெண்களை சென்றடைவதன் மூலம் ஒரு புதிய பாதையைத் திறந்தது. இந்த கருத்தரங்கில் 40-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். புக்கிட் மெர்தஜாம் மட்டுமன்றி, பெர்மாத்தாங் திங்கி, பட்டர்வொர்த், கூலிம் மற்றும் பினாங்கு பகுதிகளிலிருந்தும் பங்கேற்பாளர்கள் இணைந்தனர். எல்லா வயதினரும் அறிவு, உற்சாகம் மற்றும் முன்னேற்றத்திற்கான ஊக்கத்தைப் பெறும் ஒரு தளத்தை உருவாக்குவதே இந்த நிகழ்வின் முக்கிய இலக்காக இருந்தது.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக SNEHAM மலேசியாவின் நிறுவனர் மற்றும் தலைவர் டத்தோ டாக்டர் ஃப்ளோரன்ஸ் மனோரஞ்சிதம் சின்னையா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். தற்கொலைத் தடுப்பு மற்றும் உணர்ச்சி ஆதரவுத் துறையில் தனது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, பெண்களின் வலிமை வளர்ச்சிக்கான முக்கிய அம்சங்களை அவர் எடுத்துரைத்தார்:



- * **நடைமுறை உறுதித்தன்மை** – பொருளாதாரம், குழந்தைகளின் கல்வி, மற்றும் பணியிட சவால்கள் (பாலியல் தொந்தரவு உட்பட) ஆகியவற்றை சமாளிக்கும் திறன்;
- * **உணர்ச்சி நலம்** – உள்ளார்ந்த போராட்டங்கள், கவர்ச்சிகள் மற்றும் இன்றைய சூழலின் அழுத்தங்களை கையாளுதல்;
- * **உரிமைகள் மற்றும் கண்ணியம்** – வன்முறையின்றி வாழ்வதற்கான உரிமை, கல்வி பெறும் உரிமை, சொத்து வைத்திருக்கும் உரிமை, அரசியல் பங்கேற்பு, மற்றும் நியாயமான சம்பளம் பெறும் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளை வலியுறுத்தல்;

அடையாள டி-ஷர்ட்கள், பரிசுப் பைகள், பாராட்டு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஒவ்வொரு அம்சமும், ஒவ்வொரு பெண்ணும் மதிப்புக்குரியவராக உணர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு திட்டமிடப்பட்டது. Pertubuhan Kebajikan Sneham Malaysia அமைப்பின் தொண்டர்களின் அர்ப்பணிப்பான சேவைக்கும் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டன. பாதிப்புக்குள்ளான பெண்களுக்கு மரியாதை, அங்கீகாரம், ஆதரவு ஆகியவற்றை கொடுக்கும்போது, அனைவருக்கும் நிலையான மற்றும் வலிமையான எதிர்காலத்தை நாம் பெறுகிறோம் என இதன் வழி அறிகிறோம்.

## தவக்காலத்தில் ஆன்மீகத் தயாரிப்பு

26/3/2026 - தவக்காலத்தில் ஆன்மீகத் தயாரிப்பை முன்னிட்டு, பினாங்கு புலாவ் தீகுசில் அமலோற்பவ அன்னை தேவாலயத்தில் அருட்பணியாளர் சிரில் மன்னாயகம் அவர்கள் தமிழில் அர்த்தமுள்ள அமர்வை நடத்தினார். சுமார் 60 பேர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், தவக்காலம் என்பது செபம், நோன்பு, தானம் மூலமாக கடவுளுக்கு நெருக்கமாகும் வாய்ப்பு என நினைவூட்டினார்.

செபம் என்பது அமைதியில் கடவுளுடன் தனிப்பட்ட சந்திப்பாகும்; நோன்பு உணவை தவிர்ப்பதற்காக அல்ல, அதன் அர்த்தத்தை உணர்ந்து மாற்றம் அடைவதற்காக; தானம் புகழுக்காக அல்ல, உண்மையான கருணையுடனும் தாழ்மையுடனும் வழங்கப்பட வேண்டியது என அவர் வலியுறுத்தினார். குருத்து ஞாயிறு கிறிஸ்துவின் இறுதி பயணத்தில் பங்கேற்க அழைப்பு என்றும், இயேசுவின் தாழ்ச்சி, பாதம் கழுவுதல், தியாகம் ஆகியவை நம்மை சேவை, மன்னிப்பு, அன்பின் ஆழம் நோக்கி அழைக்கின்றன என்றும் விளக்கினார்.

ஈஸ்டர் தயாரிப்பு தனித்தனி விழாக்கள் அல்ல, புனித வியாழக்கிழமை முதல் புனித சனி வரை தொடர்ச்சியான திருவழிபாடு என அவர் கூறினார். இறுதியில், கிறிஸ்துவின் நிபந்தனையற்ற அன்பை ஏற்று "அல்லேலூயா மக்கள்" என நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என்று ஊக்குவித்தார்.

இந்த அமர்வு, புனித வாரத்தை வெளிப்புற சடங்குகளால் மட்டுமல்ல, மாற்றப்பட்ட இதயங்களுடனும் கடவுளுடன் ஆழ்ந்த சந்திப்புடனும் அணுக வேண்டிய நினைவூட்டலாக அமைந்தது.

- ஆண்ட்ரியா



## பினாங்கில் "புனித வாரத்தைப் புரிந்துக் கொள்ளுதல்" பயிற்சி

அருட்பணியாளர் சுரேன் துரை ராஜ் அவர்களால் தமிழில் நடத்தப்பட்ட இந்த அமர்வில், தவக்காலம் மற்றும் புனித வாரம் குறித்த தங்களின் ஆன்மீக அறிவை ஆழப்படுத்திக்கொள்ள சுமார் 40 பங்குமக்கள் கலந்துகொண்டனர்.

தவக்காலப் பயணத்தின் அத்தியாவசிய கூறுகளாக செபம், நோன்பு மற்றும் தர்மம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அருட்பணியாளர் சுரேன் வலியுறுத்தினார். இவை வெறும் சடங்குகள் மட்டுமல்ல, ஆன்மீக மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் அர்த்தமுள்ள நடைமுறைகள் என்று அவர் நம்பிக்கையாளர்களை ஊக்குவித்தார். குருத்தோலை ஞாயிறு முதல் பாஸ்கா விழிப்பு வழிபாடு வரை, புனித வாரத்தின் ஒவ்வொரு நாளின் முக்கியத்துவத்தையும் அவர் விளக்கினார். கிறிஸ்துவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பை மையப்படுத்திப் பேசிய அவர், திருவழிபாட்டுச் சடங்குகளில் நம்பிக்கையாளர்களை முழுமையாகப் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

மேலும், இந்த அமர்வில் பாடுகள் காலம், பெரிய வியாழனின் அடையாளங்கள், பெரிய வெள்ளியின் புனிதத்தன்மை, புனித சனிக்கிழமையின் அமைதி மற்றும் பாஸ்கா விழிப்பு வழிபாட்டின் சிறப்புகள் போன்ற முக்கிய மரபுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. புனித வாரத்திற்கும் ஈஸ்டர் பெருவிழாவிற்கும் ஆன்மீக ரீதியாகத் தயாராவதற்கும் தியானிப்பதற்கும் கிடைத்த இந்த வாய்ப்பைப் பங்குமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.



## "நற்செய்தித் தீயை மீண்டும் மூட்டுவோம்" - நற்செய்தி அறிவிப்பாளருக்கானப் பயிற்சி



பாரிட் புந்தார், ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில் (OLGH) கடந்த மார்ச் 1, 8 மற்றும் 15 ஆகிய தேதிகளில் நற்செய்தி அறிவிப்பாளர்களுக்கான மூன்று வார சிறப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணியாளர் மார்ட்டின் அர்லாந்தோ, பங்கு ஒருங்கிணைப்புக் குழு (PAT) மற்றும் பினாங்கு மறைமாவட்ட புதிய நற்செய்தி அறிவிப்புப் பள்ளி ஆகியவற்றின் தலைமையில் இப்பயிற்சி நடைபெற்றது. இதில் ஆரோக்கிய அன்னை தேவாலயப் பங்குமக்கள் மட்டுமன்றி, கூலிம் மற்றும் தாய்பா போன்ற பங்குகளிலிருந்தும் 120-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

முதல் நாள் உற்சாகமான இறைப்புகழ் மற்றும் வழிபாட்டுடன் தொடங்கியது. Msgr. ஹென்றி ராஜு அவர்கள் 'கெரிக்மா' (Kerygma - நற்செய்தியின் மையப்பொருள்) குறித்து உரையாற்றினார்:

* கடவுள் நம் ஒவ்வொருவர் மீதும் அன்பு கொண்டு, நம்மை மீட்கத் தம் ஒரே மகனாகிய இயேசுவை அனுப்பினார்.
* இயேசுவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகியவையே நற்செய்தியின் சாரம்.
* திருமுழுக்கு மற்றும் ஒப்புரவு அருட்சாதனங்களின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.
* தூய ஆவியானவரே மனமாற்றத்தின் முதன்மைச் செயல்பாட்டாளர் என்பதை நினைவூட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. ஜெப்ரி கிறிஸ்டோபர், "நமக்குத் தெரியாத ஒன்றை நம்மால் அன்பு செய்ய முடியாது" என்று கூறி, இயேசுவோடு தனிப்பட்ட உறவு கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார். விவிலியத்தின் வழியாக (யோவான் 15:5) அவரோடு இணைந்திருப்பதன் மூலம் மட்டுமே நாம் மற்றவர்களுக்குச் சாட்சிகளாக வாழ முடியும் என்றார்.

இரண்டாம் நாளில் இரண்டு பங்குமக்களின் மனமாற்றச் சாட்சியங்கள் பகிரப்பட்டன. குடும்ப எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அன்பு, பொறுமை மற்றும் விடாமுயற்சியால் அவர்கள் எவ்வாறு விசுவாசத்தில் வளர்ந்தார்கள் என்பது அனைவரையும் நெகிழச் செய்தது.

திரு. P.R. செல்வராஜன் அவர்கள் 'கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருத்தல்: உங்கள் கதையைப் பகிருங்கள்' என்ற தலைப்பில் பேசினார்:

* அன்பு, இரக்கம் மற்றும் நேர்மையின் மூலம் பிறருக்குச் சாட்சியாக இருக்க வேண்டும்.
* விசுவாசம் நம் வாழ்வை எப்படி மாற்றியது என்பதைத் தெளிவாகவும், மரியாதையாகவும் மற்றவர்களிடம் பகிர வேண்டும்.
* பிரிந்து போன கத்தோலிக்கர்கள் மற்றும் பிற சமயத்தினருடன் எளிய உரையாடல்கள் மற்றும் செபத்தின் மூலம் உறவை வளர்க்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

மூன்றாம் நாளில் அருட்பணியாளர் சுரேன் அவர்கள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழிகாட்டுதலின்படி 'பண்பாட்டுமயமாக்கல்' (Inculturation) குறித்துப் பேசினார்:

* ஒரே உண்மையான கடவுளை வழிபடும் முறை மாறாதவரை, நமது கலாச்சாரப் பழக்கவழக்கங்களைத் திருச்சபை ஏற்றுக்கொள்கிறது என்று அவர் விளக்கினார்.

நிறைவுரையாற்றிய அருட்பணியாளர் சிரில், கடவுளை ஒரு அன்புள்ள தந்தையாக ஆழமாக அறிந்து கொண்டு, அன்றாடப் பணிகளுக்கு இடையே இறைவனின் நன்மையைப் பிறரிடம் பகிருமாறு நகைச்சுவையுடனும் ஞானத்துடனும் விவரித்தார்.

இப்பயிற்சி முகாம் ஒரு 'பெந்தகோஸ்து அனுபவத்துடன்' (Pentecost Experience) நிறைவடைந்தது. தூய ஆவியின் அருள்பொழிவு மற்றும் அபிஷேகச் செபத்தின் மூலம் பங்கேற்பாளர்கள் நற்செய்தியை அறிவிக்கும் வல்லமையைப் புதுப்பித்துக்கொண்டனர். இது ஒரு பயிற்சியின் முடிவு அல்ல, மாறாக நற்செய்தியை முழங்கும் ஒரு புதிய பயணத்தின் தொடக்கம் என்று மகிழ்ச்சியுடன் உறுதிப் பூண்டனர்.

ரான் பெர்னாண்டஸ்

## நமது விசுவாசமே வெற்றி - இறை இரக்கத்தின் ஞாயிறு சிந்தனை

திப. 2:42-47; 1 பேதுரு 1:3-9; யோவான் 20:19-31

இன்றைய இறைவார்த்தை வழிபாட்டின் மையக்கருத்தாக 'விசுவாசம்' அமைகிறது. முதல் வாசகத்தில், தூய ஆவியாரின் வருகைக்குப் பிறகு இயேசுவை ஏற்றுக்கொண்ட தொடக்க கால கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வு எத்தகைய கனிகளைத் தந்தது என்பதைக் கேட்கிறோம். நமது திருப்பாடல், இறைவன் நமக்கு அளித்துள்ள விசுவாசம் உள்ளிட்ட அனைத்துக் கொடைகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்த நம்மை அழைக்கிறது.

திருத்தூதர் பேதுரு தனது கடிதத்தில் விசுவாசத்தைப் பற்றிப் பேசும்போது, விசுவாசத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்குக் கிடைக்கும் 'நம்பிக்கை, உரிமைப்பேறு மற்றும் மீட்பு' ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தங்கமானது நெருப்பிலிடப்பட்டு எவ்வாறு சுத்திகரிக்கப்படுகிறதோ, அதுபோலவே விசுவாசமும் சோதனைகள் வழியாகப் புடம் போடப்பட வேண்டும் என்று பேதுரு நினைவுபடுத்துகிறார். பொன்னை விட விலையுயர்ந்த நமது விசுவாசம், சோதனைகளின் போதுதான் தூய்மையாக்கப்படுகிறது. கண்களால் காணாமலேயே நாம் கொள்ளும் இந்த உண்மையான விசுவாசம், சொல்லொண்ணா மகிழ்ச்சியையும் மீட்பையும் நமக்குத் தருகிறது. இவை அனைத்தும் இயேசுவின் உயிர்ப்பினால் நமக்குக் கிடைத்த கனிகளாகும்.

இந்த இறை இரக்கத்தின் ஞாயிற்றுக் கிழமையில், அச்சத்தினால் கதவுகளைப் பூட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும் பத்து திருத்தூதர்களுக்கு முன் உயிர்த்த இயேசு தோன்றுவதை நற்செய்தி விவரிக்கிறது. இயேசு உயிர்த்தெழுந்த செய்தியைக் கேட்டிருந்தாலும், அவரை மறுதலித்துவிட்டு ஓடிவந்த குற்ற உணர்ச்சியும், சந்தேகமும் அவர்களை வாட்டியது.

ஆயினும், இயேசு பூட்டிய கதவுகளையும் தாண்டி உள்ளே வந்து, அவர்களுக்குத் தனது முதல் கொடையான 'ஷாலோம்' (அமைதி) என்பதை வழங்குகிறார். இது வெறும் அமைதி மட்டுமல்ல, பிரிந்துபோன உறவை மீண்டும் இணைக்கும் 'ஒப்புரவு' ஆகும். அவர் அவர்களைக் கண்டிக்கவில்லை; மாறாக, அவர்கள் மீது இறைவனின் ஆவியைச் (Ruah YHWH) செலுத்தி, "பாவங்களை மன்னிக்கும்" அதிகாரத்தை அளித்து, அவர்களைத் தனது அமைதியின் தூதுவர்களாக மாற்றுகிறார்.

தோமா அங்கு இல்லாததால் முதலில் நம்ப மறுக்கிறார். ஒரு வாரம் கழித்து இயேசுவை நேரில் கண்டு, அவரது காயங்களைத் தொட்டுப் பா ர்த்ததும், "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று அறிக்கையிடுகிறார். இயேசுவும் தந்தையும் ஒன்று என்பதை தோமா முழுமையாக உணர்ந்து கொள்கிறார்.

விசுவாசம் என்பது கடவுள் நமக்காகத் தொடக்கி வைத்த ஓர் உறவு. இது இயேசுவின் வழியாக நமக்கு வழங்கப்பட்டு, திருச்சபை என்னும் விசுவாச சமூகத்தின் வழியாகப் பாதுகாக்கப்படுகிறது. இந்த உறவில் நாம் வளரவும், நாம் பெற்ற நன்மைகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும், நற்கருணை வழிபாட்டின் மூலம் இறைவனுக்கு நன்றி செலுத்தவும் அழைக்கப்படுகிறோம்.

மன்றாட்டு, இறைபுகழ், நமது பலவீனங்களை ஒப்புக்கொள்ளுதல் மற்றும் பிறருக்காகப் பரிந்து பேசுதல் ஆகியவையே நமது விசுவாச வாழ்வின் மையமாக இருக்க வேண்டும்.

நமது விசுவாசத்தைச் சோதிக்கும் பல போராட்டங்களை நாம் சந்திக்கலாம். ஆனால், இறைவனின் ஆவியால் நாம் வலிமைப்படுத்தப்பட்டு, உண்மையான அமைதியால் நிரப்பப்படுவோம். இயேசுவின் பணியைத் தொடர்ந்து செய்ய, அதாவது இரக்கம், அமைதி மற்றும் ஒப்புரவின் தூதுவர்களாக வாழ இந்த ஆவியானவர் நமக்கு ஆற்றல் தருகிறார். இத்தகைய வாழ்வின் மூலம், நாம் மற்றவர்களை நமது அன்புத் தந்தையாம் இறைவனிடம் அழைத்துச் செல்லும் கருவியாக மாறுகிறோம்.

இறைவனின் இரக்கம் எவ்வளவு பெரியது! உயிர்த்த ஆண்டவரிடமிருந்து நாம் பெற்ற விசுவாசம் எவ்வளவு வலிமையானது! ஆமென். அல்லேலூயா!

பெர்சியுஸ் ஜேம்ஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைபெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.